# இலக்கியத்தில் புனித வளனார்

## Saint Joseph in Literature



பதிப்பாசிரியர்

அருள்தந்தை முனைவர் சி. மணி வளன் சே.ச.

கிறித்தவ ஆய்வு மையம்

Centre for Christian Research (CCR)

புனித வளனார் தன்னாட்சிக் கல்லூரி

திருச்சிராப்பள்ளி - 620 002

Scanned by TapScanner

## நூல் குறிப்பு


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | **இலக்கியத்தில் புனித வளனார்** |
| பதிப்பாசிரியர் | : | அருள்தந்தை முனைவர் சி. மணி வளன், சே.ச. |
| நுவல் பொருள் | : | கிறித்தவ இலக்கியக் கட்டுரைகள் |
| முதற்பதிப்பு | : | நவம்பர் 2019 |
| மொழி | : | தமிழ் |
| உரிமை | : | கிறித்தவ ஆய்வு மையம் |
| நூல் அளவு | : | டெம்மி |
| பக்கங்கள் | : | (viii + 164) = 172 |
| அச்சிட்டோர் | : | தி பிரிண்டிங் கவுஸ்,<br>காஜாமலை, திருச்சி-23. |
| நூல் வெளியீடு | : | கிறித்தவ ஆய்வு மையம்<br>புனித வளனார் தன்னாட்சிக் கல்லூரி,<br>திருச்சிராப்பள்ளி-620 002. |
| ISBN | : | 978-93-87360-44-0 |
| விலை | : | **200/-** |


## BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Name of the Book | : | **Saint Joseph in Literature** |
| Editor | : | Rev. Dr. S. Mani Valan SJ |
| Print | : | November 2019 |
| Language | : | Tamil |
| Copy Right | : | Centre for Christian Research (CCR) |
| Pages | : | (viii + 164) = 172 |
| Press | : | The Printing House<br>Kajamalai, Tiruchirappalli-23. |
| Book Size | : | Dimmy |
| Published by | : | Centre for Christian Research (CCR)<br>St. Joseph's College (Autonomous)<br>Tiruchirappalli-620 002. |
| ISBN | : | 978-93-87360-44-0 |
| Price | : | **200/-** |

13. வளன் வாழ்வு 88
முனைவர் சூ. ஆரோக்கியமேரி

14. இணைத்திருமுறை காட்டும் புனித யோசேப்பு 92
முனைவர் த. சிகேம்

15. புனித வளனார் பக்தி – கிறித்தவர்கள் சிறப்பாக இயேசுசபையினர் 98
அருள்முனைவர் ம. அன்பரசு சே.ச.

16. வளன் வழி 'வள' வழி 105
முனைவர் இரா. ஏஞ்சல்

17. நற்செய்தியில் புனித யோசேப்பு 110
சே. சலோமி இராஜரீகம்

18. தேம்பாவணியாகிய வளன் 113
ஜெகதீஸ்வரி

19. ஞானத்தில் செயல்பட்ட புனித யோசேப்பு 119
போதகர் முனைவர் மோ. மார்டின் டேலர்

20. தேம்பாவணி முன்வைக்கும் வளனார் வாழ்வறம் 125
சி. விஜய்

21. பரிசுத்த வேதாகமத்தில், பழைய ஏற்பாட்டின் யோசேப்பும், புதிய ஏற்பாட்டின் யோசேப்பும் - ஒரு கண்ணோட்டம் 133
போதகர் முனைவர் ஆ.பா.அ. சுசீலா கிருபாவதி

22. தேம்பாவணியில் வளனாரின் மாண்புகள் 140
சா. சாலமன்

23. தமிழ் இலக்கியம் போற்றும் வளனார் வாழ்வியல் 146
முதுமுனைவர் பால் வளன் அரசு

24. பழமொழிகளின் வழி வளனாரின் பன்முகத்திறன்கள் 155
முனைவர் ஜா. பெஞ்சமின் ஆரோன் டைட்டஸ்

25. யோசேப்பின் விண்ணேற்பு 160
டே. ஆக்னல் ஜோஸ்

Scanned by TapScanner

# வளன் வழி 'வள' வழி

முனைவர் இரா. ஏஞ்சல்,
உதவிப் பேராசிரியர்,
தமிழ் உயராய்வு மையம்,
பாத்திமா கல்லூரி (தன்னாட்சி),
மதுரை-18.

'என்வழி தனிவழி' என்ற திரை வசனத்தை, தத்தம் சூழ்நிலைக்கான வசனமாகப் பயன்படுத்தும் நாவுகள் ஏராளம். இச்சிந்தனையைச் சிந்தையில் செலுத்தியபோது ஏற்பட்ட தாக்கமே வளனார் குறித்த வளமான கருத்துகளுக்கு உந்துதலாய் அமைந்தது.

கற்பிற்குக் காவலர், நற்படிப்பிற்குத் துணையாளர், திருக்குடும்பத்தலைவர், நீதிமான், உழைப்பாளி, கன்னியர்களின் காவலர், நோயாளிகளின் நம்பிக்கை, திருஅவையின் பரிபாலகர், இறப்பவர்களின் பாதுகாவலர் என இவை போன்ற அடைமொழிகளுக்குச் சொந்தக்காரரே புனித வளனார். நம்மைப் போல் சாதாரணமானவராய் அல்லாது, கடவுளின் பார்வையில் அசாதாரணமானவராய் வாழ்ந்த காரணத்தால் மட்டுமே தேம்பாவணியின் நாயகனாய் விளங்கினார். வளனார் குறித்த வாழ்வியலைத் திருவிவிலியம் ஆழமாகப் பதிவு செய்யவில்லை. ஒரு சில வசனங்கள் மட்டுமே அவரைப் பற்றிய செய்தியைப் பதிவு செய்துள்ளன. திருவிவிலியச் செய்திகளின் அடிப்படையிலும் கத்தோலிக்கத் திரு அவை குறிப்பிடும் நம்பிக்கைச் செய்திகளின் அடிப்படையிலும் கண்ணுற்றோமேயானால் வளனார் வழி, நமக்கு வளமான வாழ்விற்கு இட்டுச் செல்லும் வழியாக அமையுமாற்றை இக்கட்டுரை விதந்தோதுகிறது.

## ஆன்ற குடிப்பிறத்தான்

"அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும்
பண்புடைமை என்னும் வழக்கு.

என்கிறது வள்ளுவம். இவ் இலக்கிய வரிகளின் பின்னணியில் நோக்கிடின் திருவிவிலியத்தில் மத்தேயு நற்செய்தியில் முதல் அதிகாரத்தில் ஒன்று முதல் பதினேழு வரையிலான திருவசனங்களில் இயேசுவின் மூதாதையர் பட்டியல் இடம் பெறுகின்றது. "யாக்கோபின்